



# மாய வலை

பா.ராகவன்

ஏஞ்சல் என்றதும் பதறி, நிமிர்ந்து உட்கார்ந்தது காவல்துறை. ஐயோ, அவருக்கு என்ன? சென்ற அத்தியாயத்தில் பார்த்த திருவாளர் இ.டி.ஏ. கோயிஞ்சாமி நிதானம் தவறாமல் ஒவ்வொரு அட்சரமாக உச்சரித்தார். ஏஞ்சல் பத்திரமாக இருக்கிறார். அவரை நினைத்துக் கவலைப்படவேண்டாம். People's Party ஆட்களைச் சமாதானப்படுத்துங்கள். எதிர்க்கட்சிகள் யாரும் அவரைக் கடத்திக்கொண்டுபோய்விடவில்லை. இதோ, என் கண்களுக்கு முன்னால் ஏஞ்சல் அமர்ந்திருக்கிறார். அவ்வப்போது கொஞ்சம் கத்துகிறார் என்பதால், வாயில் பிளாஸ்திரி ஒட்டியிருக்கிறோம். மற்றபடி சமர்த்து.

அலறிவிட்டது காவல்துறை. மிரட்டுவதா கெஞ்சுவதா? இதுதான் அவர்கள் குழப்பம். இரண்டு விஷயங்களில் இ.டி.ஏ.வை அடித்துக்கொள்ள ஆள் இல்லை. கார் பாம் வைப்பது. ஆட்களைக் கடத்துவது. கனகச்சிதமாக மட்டுமே இந்த இரண்டையும் செய்து முடிப்பவர்கள் அவர்கள். மிரட்டினால், ஏதாவது ஏடாகூடம் செய்துவிடக்கூடும். கெஞ்சினால், அபாயகரமான கோரிக்கைகளை வைக்கக்கூடும். ஆனால், வேறு வழியில்லை.

'அவரை ஒன்றும் செய்துவிடாதீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும்?'

'ஐந்து நிமிடங்கள் கழித்துக் கூப்பிடுகிறோம்.'

ரிசீவர் பட்டென்று வைக்கப்பட்டது. கமிஷனர் முதல் கவர்னர் வரை அத்தனை பேருக்கும் தகவல் பறந்தது. மூலைக்கு மூலை கான்ஃபரன்ஸ் கால். விசாரிப்புகள். திட்டங்கள். இ.டி.ஏ.வின் அழைப்பை ட்ரேஸ் செய்ய முடியவில்லை. அடுத்த முறை அழைப்பதற்குள் சுதாரித்துவிடவேண்டும். நம்பரை எடுத்து, அட்ரஸை எடுத்து, ராணுவ கமாண்டோக்களை அனுப்பி... ம்ஹூம் வாய்ப்பேயில்லை. இ.டி.ஏ. புத்திசாலி அமைப்பு. அவர்களுக்கு எதிராகக் காய்களை நகர்த்துகிறோம் என்று தெரிந்தால் போதும். கதையை முடித்துவிடுவார்கள். ஏஞ்சல் மீது நூலிழை கீறல் விழுந்தாலும், சர்வதேச அளவில் மானம் கப்பல் ஏறிவிடும். என்ன செய்யலாம்?

மற்றொருபுறம், ஸ்பெயின் கொதித்துக் கொண்டிருந்தது. குறிப்பாக, People's Party (PP) கட்சி அலுவலகம். இன்று, ஸ்பெயினில் இவர்கள்தான் பிரதான எதிர்க்கட்சியினர். மக்களிடையே பெரும் செல்வாக்கு உண்டு. சர்வதேச அளவில் மிகவும் பாப்புலராக இருக்கும் கட்சியும்கூட. European People's Party (EPP) என்னும் ஜம்போ அமைப்பின் உறுப்பினர். EPPல் முப்பத்தெட்டு நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளனர். அந்த முப்பத்தெட்டு பிபியில் இந்த பிபி கொஞ்சம் பிரபலமானது.

ரீச் புரிகிறது இல்லையா? ஏஞ்சல் காணாமல் போன மறு நிமிடமே EPPக்கு தகவல் போய் சேர்ந்துவிட்டது. உலகம் முழுவதும் கவலை தோய்ந்த கண்டனங்கள். 'வக்கற்ற அரசாங்கமே, என்ன செய்துகொண்டிருக்கிறாய்? ஏஞ்சலைத் தேடிக் கண்டுபிடி.' முதல் ஆர்ப்பாட்டம் ஸ்பெயினில் தொடங்கியது. 'தலைவர் அழைக்கிறார், அலைகடலெனத் திரண்டு வாரீர்!' அழைப்பு விடுத்ததும் லாரிகளிலும் மீன் பாடி வண்டிகளிலும் திரண்டு வருவார்களே, அதைவிட அதிகமான மக்கள் மாட்ரிட் வீதிகளில் திரண்டனர். 'எங்கே ஏஞ்சல்? எங்கே ஏஞ்சல்?'

திரும்பும் பக்கமெல்லாம் சுவரொட்டி. சுவரொட்டிகளிலெல்லாம் என்லார்ஜ் செய்யப்பட்ட ஏஞ்சலின் முகம். கீழே கொட்டை எழுத்துகளில் விளம்பரம். ஏஞ்சலைக் காணவில்லை.

ஏஞ்சலின் குடும்பத்தினர் படபடப்புடன் றிறி கட்சித் தலைவரைச் சந்தித்தார்கள். ஏஞ்சலுக்குப் பெண் பார்த்துவிட்டார்களாம். பெண்ணின் பெயர் மரிமார். திருமணத்துக்கு நாள் நட்சத்திரம் எல்லாம் பார்த்தாகிவிட்டது. பெண் வீட்டுக்காரர்கள் போன் மேல் போன் பண்ணிக் கேட்கிறார்கள். 'என்ன ஆச்சு மாப்பிள்ளைக்கு? பெண்ணைப் பிடிக்கவில்லையா? ஏதாவது காதல் விவகாரமா? எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள். என்ன சொல்ல? எதைச் சொல்ல?'

அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தது PP அலுவலகம். 'கவலைப்படாதீர்கள் அம்மா, நாங்கள் இருக்கிறோம், பார்த்துக்கொள்கிறோம். நீங்கள் வீட்டுக்குப் போங்கள். ஏஞ்சலை பத்திரமாக அனுப்பி வைக்கிறோம். எங்கள் பொறுப்பு.'

சொல்லிவிட்டார்கள். ஆனால் அவர்களுக்கும் உதறல்தான். காவல்துறை உயர் அதிகாரிகள் வரை விவாதித்துவிட்டார்கள். சண்டை போட்டார்கள். வேண்டிய மட்டும் பொலிடிகல் பிரஷர் கொடுத்தாகிவிட்டது. வேறு என்ன செய்யமுடியும்?

ஐந்து நிமிடங்களில் கூப்பிடுகிறோம் என்று சொன்ன இ.டி.ஏ.விடமிருந்து அரை மணி நேரத்துக்குப் பிறகுதான் போன் வந்தது.

'நாங்கள் பேசுவதை டேப் செய்யவோ, ட்ரேஸ் செய்யவோ முயற்சிக்க வேண்டாம். கமாண்டோக்களை அனுப்புவது, ராணுவத்தை அனுப்புவது எதுவும் வேண்டாம். ஏஞ்சல் இல்லாத ஸ்பெயின் எப்படி இருக்கும் என்பதை இந்த அரை மணி நேரத்தில் தெரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறோம். ஏஞ்சலை இழக்க நீங்கள் விரும்ப மாட்டீர்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆங், அவருக்குப் பெண் எல்லாம் பார்த்திருக்கிறார்களாமே. சீக்கிரமே விவாஹ ப்ராப்திரஸ்து.'

'உங்களுக்கு என்ன வேண்டும்?'

'அதைக் கொடு, இதைக் கொடு என்று அபாண்டமாக எதையாவது கேட்கும் வழக்கம் எங்களுக்கு இல்லை. எங்களுக்கென்று சில விதிமுறைகள் உள்ளன. காசு பணம் அல்ல எங்கள் தேவை. சுதந்திர பாஸ்க். அதுதான். அது மட்டும்தான் பிரதானம். சரி, விஷயத்துக்கு வருவோம். உருப்படியாக ஒரு காரியம் செய்யுங்கள். ஏஞ்சலை அப்படியே வண்டியில் உட்கார வைத்து சொக்காய் கசங்காமல் அனுப்பிவிடுகிறோம்.'

'என்ன?'

'நாங்கள் தீவிரவாதிகள் கிடையாது. விடுதலைப் போராட்ட வீரர்கள். அந்த மரியாதையை எங்களுக்கு வழங்கி சிறையில் இதுவரை நீங்கள் பிடித்து வைத்துள்ள அத்தனை போராளிகளையும் பாஸ்க் தேசத்து சிறைச்சாலைகளுக்கு மாற்றவேண்டும். இன்னும் 48 மணி நேரங்கள் மட்டுமே உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் கவுண்ட் டவுன் இப்போது தொடங்குகிறது. எல்லோரும் இடம் பெயர்ந்துவிட்டார்கள் என்ற தகவல் வந்து சேர்ந்த மறு நிமிடமே ஏஞ்சல் உங்களிடம் இருப்பார்.'

அவ்வளவுதான். தொடர்பு துண்டிக்கப்பட்டது.

எங்கிருந்து தகவல் போனது, எப்படி என்று தெரியவில்லை. பத்திரிகையாளர்களும் தொலைக்காட்சி சானல்காரர்களும் குவிய ஆரம்பித்தார்கள். கேள்வி மேல் கேள்வி. யார்? இ.டி.ஏ.தானே? என்ன கேட்கிறார்கள்? சிறைக் கைதிகளைத்தானே? என்ன செய்யப்போகிறீர்கள்? எப்படி மீட்கப் போகிறீர்கள்?

வாயே திறக்கவில்லை காவல்துறை. இதுபோன்ற சமயங்களில் எதுவும் பேசாமல் இருப்பதுதான் உசிதமானது. நாற்பத்தெட்டு மணி நேரம் கொடுத்திருக்கிறார்கள். அதற்குள் எதையாவது செய்து ஏஞ்சலை மீட்டாகவேண்டும். ராணுவம், ஆளும் கட்சி, எதிர்க் கட்சி, உதிரிக் கட்சிகள் எல்லாம் ஒன்றுகூடிப் பேச ஆரம்பித்தன.

இ.டி.ஏ.வைச் சேர்ந்த எத்தனை பேர் சிறையில் இருக்கிறார்கள் என்னும் புள்ளி விவரம் உடனடியாக வந்து சேர்ந்தது. தலைமை ஆட்கள் என்று சொல்லிக்கொள்ளும்படி யாரும் இல்லை. பெரும்பாலானோர் கமாண்டோக்கள்தாம். சிலர் தளபதிகளாக இருக்கக்கூடும். எப்படியும் அவர்கள் வாய் திறக்கப் போவதில்லை.

பேசாமல் கைதிகளை விட்டுவிடலாம் என்று கூடச் சிலர் ஆலோசனை கூறினார்கள். ஆனால், அரசாங்கத்துக்கு அதில் உடன்பாடு இல்லை. அமெரிக்காவும் ஐரோப்பிய தேசங்களும் ஸ்பெயினை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றன. கைதிகளை அனுப்பி வைத்தால், அதை விடப் பெரிய அவமானம் வேறு இருக்க முடியாது. அடச்சே, பூஞ்சையான தேசம் என்று ஒதுக்கிவிடுவார்கள். பத்திரிகைகள் நார் நாராகக் கிழித்துத் தோரணம் கட்டிவிடும்.

இ.டி.ஏ.வின் கோரிக்கை புத்திசாலித்தனமானது. எங்கள் ஆட்களை விடுதலை செய் என்று அவர்கள் கேட்கவில்லை. கேட்டிருக்கலாம். ஆனால் செய்யவில்லை. பாஸ்க் தேசத்து சிறைச்சாலைகளுக்கு மாற்று என்கிறார்கள். அனைவரையும் மொத்தமாக ஒரே முனையில் குவிக்கச் சொல்கிறார்கள். பாஸ்க் அவர்கள் பிரதேசம். கொண்டு வந்து வைத்துவிட்டால், அப்புறம் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். எப்படி யாரை விடுவிக்கவேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும்.

இப்போதைக்கு இ.டி.ஏ.வுக்கு மக்கள் ஆதரவு தேவை. எங்கள் கோரிக்கையை இன்னமும் நாங்கள் கைவிடவில்லை என்பதை, அவ்வப்போது அவர்களுக்கு உணர்த்திக்கொண்டே இருக்கவேண்டியது அவசியம். இது ஒரு பப்ளிசிட்டி ஸ்டண்ட். அவ்வளவே.

இரண்டு வழிகள்தான் சாத்தியம். ஒன்று, இ.டி.ஏ.வுடன் பேசி, டெட்லைனை நீட்டிப்பது. நிறைய சிறைச்சாலைகளில் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களை ஒவ்வொருவராக வெளியில் அனுப்ப எப்படியும் ஒரு வாரம் பிடிக்கும். பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும்போதே, ஆட்களை அனுப்பி இ.டி.ஏ.வின் மறைவிடத்தைக் கண்டுபிடிப்பது. பிறகு, அதிரடித் தாக்குதல். ஏஞ்சல் மீட்பு.

மணிக்கணக்கில் மீட்டிங் போட்டார்கள். யார் யாரிடமோ என்னென்னவோ பேசினார்கள். கமாண்டோக்களைத் திரட்டினார்கள். உளவாளிகளை உஷார்ப்படுத்தினார்கள். இ.டி.ஏ.வின் மறைவிடங்களைத் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டது.

ஓஹோ, நீங்கள் அப்படி வருகிறீர்களா? சட்டென்று சுதாரித்துக்கொண்டது இ.டி.ஏ. ம்ஹூம், தப்பாகச் சிந்திக்கிறார்கள். சீரியஸ்னஸ் இல்லை. கொஞ்ச காலத்துக்கு எதுவும் செய்யாமல் நல்ல பிள்ளையாக இருந்தது தப்பாகிவிட்டது. சின்ன கோரிக்கைதான். ஆனால், அதை நிறைவேற்றக்கூட முடியவில்லை அவர்களால். இ.டி.ஏ. யார் என்பதை உடனடியாகக் காட்டியாகவேண்டும்.

மிரட்சியுடன் அமர்ந்திருந்த ஏஞ்சலை நோக்கித் திரும்பினார் அந்த இ.டி.ஏ. தளபதி. மன்னித்துவிடு ஏஞ்சல். ஏஞ்சல் கண்களால் திமிறத்தொடங்கிய அதே சமயம், இரண்டு பேர் துப்பாக்கியை உருவிக்கொண்டார்கள். ஏஞ்சலைப் பின்பக்கமாகத் திருப்பி நிற்க வைத்தார்கள். இரண்டு குண்டுகள் வெடித்தன. ஓம் சாந்தி.

உடலைத் தூக்கி வந்து வண்டியில் ஏற்றினார்கள். விரைவாக ஓட்டிச்சென்று ஒரு வளைவில் அப்படியே கடாசிவிட்டுப் போயேபோய்விட்டார்கள். ஐந்து பத்து நிமிடங்களில் ஏஞ்சல் அடையாளம் காணப்பட்டார். தலையின் பின்பக்கத்திலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. கைகள் பின்பக்கமாகக் கட்டப்பட்டிருந்தன. ஆம்புலன்ஸில் உடலை அள்ளிப்போடும்போதுதான் தெரிந்தது. இதென்ன மூச்சு விடும் சத்தம் கேட்கிறதே, ஆ, ஏஞ்சல் உயிருடன்தான் இருக்கிறாரா?

'ஆக்ஸிஜன் எங்கே? ஆஸ்பத்திரி எங்கே?' தடாலென்று பரபரப்பாகி ஆம்புலன்ஸை விரட்டி ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். காவல் அதிகாரிகள் கூடவே இருந்தனர். 'ஏஞ்சல் எப்படியாவது பிழைக்கவேண்டும். இ.டி.ஏ. நிச்சயம் தோற்கவேண்டும். டாக்டர், ஏதாவது செய்யுங்கள்.'

சில மணி நேரங்கள் உயிருடன் இருந்தார் ஏஞ்சல். சுயநினைவு இல்லை. பிறகு, சத்தமில்லாமல் செத்துப்போனார்.

ஸ்பெயினின் சமகாலச் சரித்திரத்தில் மறக்க முடியாத நிகழ்வாக மாறியது ஏஞ்சலின் மரணம். ஒரு பக்கம் PP. மற்றொரு பக்கம் EPP. பிறகு, மக்கள். ஆறு மில்லியனுக்கும் அதிகமானவர்களைக் கொண்ட மாபெரும் அமைப்பு அது. கண்ணீர்ப் புகையாவது, சாம்பிராணியாவது? ஸ்பெயின் அரசாங்கத்தால் சமாளிக்க முடியவில்லை.

இ.டி.ஏ.வுக்குப் பரம திருப்தி. அவர்கள் எதிர்பார்த்ததைப்போலவே ஸ்பெயினின் முகம் வெளிறியிருக்கிறது. போதும். இதுபோதும். ஆனால், இ.டி.ஏ. எதிர்பாராத மற்றொரு திருப்பமும் நிகழ்ந்தது. இ.டி.ஏ. மீதான மக்கள் எதிர்ப்பு.

ஏஞ்சல் கொலைக்குப் பிறகு, Foro Ermua (ஆங்கிலத்தில் Ermua Forum) என்னும் பெயரில் ஒரு அமைப்பு தோன்றியது. பாஸ்க் தேசத்து மக்கள் ஒன்று சேர்ந்து ஆரம்பித்த அமைப்பு. இ.டி.ஏ.வுக்கு அவர்கள் தெரிவிக்க விரும்பிய செய்தி இதுதான். உங்கள் உதவி எங்களுக்குத் தேவையில்லை, எங்கள் கோரிக்கையை நாங்களே பார்த்துக்கொள்கிறோம். ஏஞ்சல் போன்றோரைக் கொல்வதைத் தயவு செய்து நிறுத்துங்கள். முடிந்தால், அரசாங்கத்திடம் சரணடைந்துவிடுங்கள்.

இ.டி.ஏ. யோசித்தது. செய்வதற்கு ஒன்றுமில்லை. எனவே, ஒரு புன்னகையில் அதைப் புறக்கணித்து விட்டார்கள்.